Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.342/2022 Date: 30.09.2024
Deposition of witness for prosecution: PW1 ( LW1 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. கமரூதின் | Caste | |
| Father/ Husband Name | பெத்தார்மீரான் | Calling | விவசாயம் |
| Village | உத்தமபாளையம் | Religion | முஸ்லீம் |
| Taluk | உத்தமபாளையம் | Age | 72/2024 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 30.09.2024 TIME 11.56 **Am**

எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**Crlmp.எண்.4888/2024 மனுவின் பேரில் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி :–**

1) 30.09.1936 ம் தேதி ஆவண எண்.1512/1936 மூலமாக மேற்படி சொத்துக்களை எனது தாத்தா மற்றும் அவரது சகோதரர் சேர்ந்து வாங்கிய கிரைய ஆவண சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.8**.

2) 09.02.1954 ம் தேதி ஆவண எண்.473/1954 மூலமாக எனது தாயார் பெயரில் உள்ள தான செட்டில் மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.9**.

3) 19.04.1970 ம் தேதி ஆவண எண்.1170/1970 ஆவணம் மூலமாக எனது சகோதரி பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.10**. மேற்படி பத்திரத்தில் காதர் மைதின் தாத்தா சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என சாட்சி கூறுகிறார்.

4) 01.03.2011 ம் தேதி ஆவண எண்.791/2011 ஆவணம் மூலமாக எனது சகோதரி என் மருமகனுக்கும், மகனுக்கும் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.11**.

5) 07.08.2019 ம் தேதி ஆவண எண்.4922/2019 ஆவணம் மூலமாக எனது தாயாருக்கு அவரது பெரியப்பா பாகத்திற்கு கிடைத்த அரை பங்கை அவரது வாரிசுகளிடம் இருந்து நான் எழுதி வாங்கிய விடுதலை பத்திரம் சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.12**.

6) 07.10.2003 ம் தேதி ஆவண எண்.186/2003 ஆவணம் மூலமாக 1 ம் எதிரிக்கு நைனார்கான், கொந்தால்கான் ஆகியோர் வாரிசுகள் எழுதிக்கொடுத்த பவர் பத்திரம் சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.13**. மேற்படி பவர் பத்திரத்தில் உள்ள சொத்துக்கள் எங்களது சையது ராபியா சொத்துக்களுக்கு தொடர்ப்பு அற்றது என்று சாட்சி கூறுகிறார். (எதிரி தரப்பில் சாட்சி சொத்து தொடர்பான உரிமையை கூற இயலாது என்று ஆட்சேபணை செய்யப்படுகிறது.)

7) 26.07.2011 ம் தேதி ஆவண எண்.3409/2011 ஆவணம் மூலமாக மேற்படி பவர் பத்திரம் அடிப்படையில் எதிரி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம்

சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.14**.
8) 26.07.2011ம் தேதி ஆவண எண்.3410/2011 ஆவணம் மூலமாக மேற்படி பவர் பத்திரம் அடிப்படையில் சர்வே எண்.491யை பொறுத்து எதிரி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.15**.
9) 26.07.2011ம் தேதி ஆவண எண்.3411/2011 ஆவணம் மூலமாக மேற்படி பவர் பத்திரம் அடிப்படையில் சர்வே எண்.491யை பொறுத்து எதிரி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.16**.
10) 18.04.2017ம் தேதி மேற்படி சொத்துக்களை பொறுத்து வருவாய் கோட்டாட்சியர் உத்தமபாளையம் அவர்கள் நடவடிக்கையின் பேரில் ஏற்பட்ட உத்தரவு சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.17**. (மேற்படி உத்தரவு இந்த வழக்கிற்கு தொடர்பற்றது என்று எதிரி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது.)
11) மேற்படி சொத்துக்களை பொறுத்து ஏற்பட்டுள்ள டவுன் சர்வே பட்டா இணைய வழி பெறப்பட்டது (எண்ணிக்கை 2) **அ.சா.ஆ.18**. (மேற்படி ஆவணம் அரசு தரப்பில் கூடுதல் ஆவணமாக அனுமதிக்ககோரி மனு செய்து குறியீடு செய்யப்படுகிறது. எதிரி தரப்பில் மேற்படி ஆவணம் உரிய முறையில் பெற்று தாக்கல் செய்யவில்லை என்றும், இறுதியறிக்கையுடன் தாக்கல் செய்யவில்லை என்றும், ஆட்சேபணை செய்யப்படுகிறது.)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் 1951ம் வருடம் பிறந்தேன் என்றால் சரிதான். எனது பெரிய தாத்தா மனைவி பெயர் ஞாபகமில்லை. அவரது பிள்ளைகள் பெயர் முகமது மக்துன், முகமது சலீம் மற்றும் அலீமா, பச்சரியா, பல்கீஸ், ஜமீலா, கொரைசா ஆகும். அ.சா.ஆ.8 ஆவணத்தில் சாட்சி கையெழுத்து செய்த நபர்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் விசாரணையின்போது கோலார் ராவுத்தர் தன்னுடைய பாகத்திற்கு கிடைத்த சொத்தை எம்.என்.பீர்முகமது ராவுத்தரிடம் பராமரித்து வர ஒப்படைத்தார் என்ற விபரத்தை சொல்லியுள்ளேன். நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலிஸ் விசாரணையில் கோலார் ராவுத்தர் மற்றும் காதர் மகதன ராவுத்தர் என்ற சின்னப்பா ராவுத்தர் என்பவர்கள் எம்.என்.பீர்முகமது ராவுத்தரிடம் சொத்துக்களை பராமரித்து பயிர் செலவு தொகை போக மீதித்தொகை கொடுத்துவிடுவதாக உறுதிமொழி கொடுத்தார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் தற்போது ஞாபகமில்லை. பீர்முகமது ராவுத்தர் எவ்வளவு செலவு போக மீத விவசாய தொகை கட்டியதாக ஆவணம் எதுவும் போலிசார் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எந்தெந்த வருடத்தில் என்னென்ன பயிர் செய்யப்பட்டது என்று போலிசார் ஆவணம் கைப்பற்றினார்களா என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. எம்.என்.பீர்முகமது ராவுத்தரிடம் சொத்துக்கள் எதுவும் ஒப்படைக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் கிணறு, மோட்டார், மின்இணைப்பு உள்ளது என்றால் சரிதான்.

கிணறு எந்த வருடத்தில் வெட்டப்பட்டது என்று ஞாபகமில்லை. மின் இணைப்பு எந்த வருடம் ஏற்பட்டது என்று தெரியவில்லை. மின்இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் நைனாகான் பெயரில் சொத்து இருப்பதாக சொன்னார்கள். 1978 வரை என்னிடம் சொத்து இல்லை எனது சித்தப்பா தான்

பராமரித்து வந்தார். எனது தாத்தா அ.சா.ஆ.9 தானசெட்டில்மெண்ட் எழுதிய விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. அந்த பத்திரத்தில் பிரிவினையில்லாத சொத்தை தானமாக கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு மீதிப்பாகம் பெறப்பட்டுள்ளது. அ.சா.ஆ.9 ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. இந்த சொத்துக்கள் சம்பந்தமாக எதிரிக்கு எதிராக அ.வ.எண்.193, 194/2020 ஆகிய வழக்குகள் சார்பு நீதிமன்றம் உத்தமபாளையத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் வாய்மொழி கிபா கொடுத்த தேதி சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. கோலார் ராவுத்தர் எனது தாத்தாவிற்கு வாய்மொழி கிபா கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்து எனது தாயாருக்கு பாத்தியமானது அல்ல என்று சொன்னால் சரியல்ல. 1954 க்கு பின் எனது தாத்தா இருவரும் பீர்முகமது ராவுத்தரிடம் செலவு போக வருமானத்தை என் சித்தப்பா கே.கே.முகமது சரீப்பிடம் கொடுக்குமாறு சொன்னார்கள் என்று போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை.

மேலும், எனது சித்தப்பா முகமது சரீப்பிற்கு மேற்படி சொத்துக்கு மேற்பார்வை செய்துவந்ததாக சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். போலிஸ் விசாரணையில் 1954 க்கு பிறகு மேற்படி சொத்துக்களை பராமரித்து பயிர் செலவு தொகை போக மீதித்தொகை வந்தது ஆவணங்கள் எதையும் போலிசார் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். பீர் முகமது, முகமது சரிப்பிடம் எந்த வரவு செலவு கணக்கும் எப்போதும் கொடுத்ததில்லை என்றால் சரியல்ல. பீர் முகமது ராவுத்தர் மற்றும் முகமது சரீப் ஆகியோர்களின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி ஞாபகமில்லை. பீர் முகமது ராவுத்தர் , முகமது சரீப், நைனார்கான் ஆகியோர் நான் சொல்லும் காலத்தில் இறக்கவில்லை என்றால் சரியல்ல. 1954 ம் ஆண்டு ஆவணத்தை எழுதியது யார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அ.சா.ஆ.10 ஆவணத்தில் பிரிவினையில்லாத சொத்து என்று இந்த வழக்கு சொத்தை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.11 செட்டில்மெண்ட் ஆவணத்தில் இந்த வழக்கு சொத்தை பொறுத்து பிரிவினையில்லாத சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரியின் அத்தை பெயர் காதர் உசியம்மாள் என்ற ராபியா அம்மாள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவரது கணவர் பெயர் முகமது சுல்தான் என்றால் சரிதான். அ.சா.ஆ.13 பவர் பத்திரத்தில் ராபியா அம்மாள் கணவர் மற்றும் அவரது பிள்ளைகள் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ.13 ஆவணம் காதர் உசியம்மாள் சொத்தை பொறுத்து எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.14, 15, 16 ஆவணங்கள் 1ம் எதிரி முகவர் என்ற அடிப்படையில் கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் போலிஸ் விசாரணையின்போது முகமது சுல்தான் சொன்னதாக சொல்லப்படும் சங்கதிகள் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் 1ம் எதிரி தாசில்தாரிடம் என்ன மனுவில் குறிப்பிட்டுள்ளதாக கூறப்படும் சங்கதிகளை சொல்வதற்கு எனக்கு தகுதியில்லை என்றால் சரியல்ல. சொத்துக்கள் காதர் உசியம்மாள் என்ற ராபியா அம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், 1999 ல் அவர் இறந்த பிறகு அவரது வாரிசுகள் 1ம் எதிரிக்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்து அவர் அதை 2 ம் எதிரிக்கு கிரையம் செய்து உள்ளார் என்றால்

சரியல்ல. எனது சாட்சியம் உண்மைக்கு புறம்பாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

ஒம்/ திரு. இராமநாதன்
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.342/2022 Date: 30.09.2024
Deposition of witness for prosecution: PW2 ( LW2 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. காதர்பாட்சா | Caste | |
| Father/ Husband Name | சையது இப்ராகிம் | Calling | சொந்ததொழில் |
| Village | கம்பம் | Religion | முஸ்லீம் |
| Taluk | உத்தமபாளையம் | Age | 52/2024 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 30.09.2024 TIME 11.56 **Am**

**எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் 1971ம் வருடம் பிறந்தேன் என்றால் சரிதான். நான் கேட்டரிங் டெக்னாலஜி மற்றும் ஹோட்டல் மேனோஜ்மெண்ட் படித்துள்ளேன். 1995ல் சென்னையில் படித்து முடித்தேன். பள்ளிப்படிப்பு கம்பம், திண்டுக்கல், சென்னையிலும் படித்தேன். திண்டுக்கல் , சென்னையிலும் விடுதியில் தங்கி படித்தேன் என்றால் சரிதான். வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை பராமரிப்பு செய்ய எனது தாத்தாவிடம் பீர்முகமது ராவுத்தர் வாங்கவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தை எப்போது வேண்டுமானலும் கொடுப்பதாகவும், விவசாய தொகை கொடுத்து வருவதாக கூறியிருப்பது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. எப்போது அவ்வாறு சொல்லப்பட்டது என்றால் நான் வெளியூரில் இருந்ததால் வருடம் ஞாபகமில்லை. கல்லூரி முடித்த பின்பு சுமார் 10 வருடம் வெளியூரிலும், வெளிநாட்டிலும் இருந்தேன். 1974ல் எனது பாட்டி சையது ராபியாவிற்கு தானம் கொடுத்ததாக சொல்லப்படும் அ.சா.ஆ.9, 10, 11 ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. கே.கே.சரீப் தாத்தாவிடம் பீர் முகமது ராவுத்தர் எந்த விதமான வருமானத்தையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நிலங்கள் மூலமாக எவ்வளவு வருமானம் வந்தது எவ்வளவு செலவானது என்று ஆவணங்கள் எதுவும் போலிசார் கைப்பற்றிக்கொள்ளவில்லை என்றால் அது பற்றி ஞாபகமில்லை. அதற்கான ஆவணங்கள் இல்லை. கே.கே.சரீப், பீர் முகமது ராவுத்தர் ஆகியோரது இறப்பு சான்றிதழ் கொடுத்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. அதன் பிறகு நைனார்கான் எவ்வளவு தொகை எனது தாய்மாமாவிடம் கொடுத்தார் என்று நான் சிறுவயதாக இருந்ததால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. ஆனால் பணம் கொடுத்தார். என்னை வற்புறுத்தியதன் பேரில் எனக்கு தெரியாத சங்கதிகளை பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நைனார்கான் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகமில்லை. எனது தாய்மாமா அ.சா.1, 1ம் எதிரியிடம் சொத்தையும்,

வருமானத்தையும் எப்போது கேட்டார் என்று எனக்கு ஞாபகமில்லை. அ.சா.1 எப்போதும், 1ம் எதிரியிடம் சொத்தையோ, வருமானத்தையோ கேட்டதில்லை என்றும், 1ம் எதிரி மேற்படி சொத்துக்களை மோசடியான ஆவணங்கள் மூலம் கிரையம் பெற்றுவிட்டதாக சொல்லவும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.9, 10, 11 ஆவணங்களில் பிரிவினையில்லாத சொத்து என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். காதர் மைதீன் தாசில்தாரிடம் என்ன மனுவில் குறிப்பிட்டுள்ளதாக கூறப்படும் சங்கதிகளை சொல்வதற்கு எனக்கு தகுதியில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி தாசில்தார், RDO விடம் கொடுத்த வாக்குமூலம் பற்றி சொல்வதற்கு எனக்கு தகுதியில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரியின் உடன்பிறந்த நபர்கள் எனக்கு தெரியாது. அவரது தகப்பனார் உடன் பிறந்த நபர்கள் பற்றி எனக்கு தெரியாது. பவர் பத்திரங்களில் உள்ள நபர்கள் பற்றி சாட்சியம் அளிக்க எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.9, 10, 11 ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. எனது பாட்டி சையது ராபியா எப்போதும் இந்த சொத்திற்கு உரிமையாளர் அல்ல என்பதால் இந்த சொத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து தென்னந்தோப்பு உள்ளது என்றால் சரிதான். கிணறு, மோட்டார் உள்ளது. கிணறு எப்போது வெட்டியது என்று எனக்கு ஞாபகமில்லை. மோட்டார் சர்வீஸ் எப்போது வாங்கப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. E.B கட்டணம் யார் செலுத்துகிறார் என்றால் 1ம் எதிரி செலுத்திவருகிறார். யார் பெயரில் மின் இணைப்பு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சொத்துக்கள் 1ம் எதிரியின் அத்தை காதர் உசியம்மாள் என்ற ராபியா அம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், 1999ல் அவர் இறந்த பிறகு அவரது வாரிசுகள் 1ம் எதிரிக்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்து அவர் அதை 2ம் எதிரிக்கு கிரையம் செய்து உள்ளார் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் உண்மைக்கு புறம்பாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

ஓம்/ திரு. இராமநாதன்
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.